ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

# கலைஞர் சோ. தேவராஜா

சட்டத்தரணியாகத் தொழில் புரிந்து கொண்டு, தேசிய கலை இலக்கியப் பேரவை, கொழும்பு தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளூடாக இலக்கியப் பணிகள் ஆற்றியபடி நாடகக் கலையில் தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திவரும் பல்துறை வித்தகர் சோ. தேவராஜா அவர்களைப் பதிவு செய்வதில் தாய்வீடு மகிழ்ச்சி அடைகிறது.


பண்டத்தரிப்பு காலையடியைச் சேர்ந்த வல்லிபுரம் சோமசுந்தரம் - சற்குணம் குணரங்கம் இணையரின் மூத்த மகனான இவர் பண்ணாகம் வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியையும் செங்குந்தா இந்துக் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றவர். பின்னர் கொழும்பு பல்கலைக்கழக சட்டப்படிப்பில் பட்டம் பெற்ற இவர் இலங்கை சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணி ஆனார். 1977ல் இனக் கலவரம் ஆரம்பித்து கொழும்பின் சில பகுதிகள் எரிந்து கொண்டிருந்த நாளொன்றில் நீதிமன்றில் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்து சலசலப்பை ஏற்படுத்தியவர்.

சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக அரசியல் பணியாற்றி வரும் இவர், சிறந்த எழுத்தாளரும் நாடக நடிகையும் நல்லாசிரியையுமான கலாலட்சுமி என்பவரைத் திருமணம் செய்தார்.

நாலாம் வகுப்பு படிக்கும் போது இரட்டைப் புலவர் என்ற நாடகத்தில் முடவராகப் பாத்திரமேற்று நடிக்க ஆரம்பித்த இவர் நக்கீரன் போன்ற சில நாடகங்களில் நடித்து நாடகத்தின் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்தினார். அமெரிக்க மிஷன் பாடசாலை ஆசிரியை குலமணி அவர்கள் இவரை வீட்டுக்கு அழைத்து பேச்சு, நாடகம் போன்றவற்றைப் பயிற்றுவித்து ஏழாலை வடக்கு சனசமூக நிலையம் நடத்திய போட்டிகளில் பரிசுகள் பெற்றதையும் இவ்வாறே, முத்துத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியர் ஈவினை செல்வரட்ணம் அவர்கள் தனக்கு நாடகங்கள் பழக்கி ஊக்கிவித்ததையும் நன்றியுடன் நினைவு கூறுகிறார்.

பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தினர் மேடையேற்றிய சாம்பிராட் அசோகன் நாடகத்தில் அசோகன் பாத்திரமேற்று கதாநாயகனாக நடிக்க ஆரம்பித்த இவர் 1968ல் தனது நண்பர்கள் தனகோபால், கிருஷ்ணதாசன் ஆகியோருடன் இணைத்து தேவகோபால கிருஷ்ணா நாடக மன்றத்தை ஆரம்பித்தார். மூவரினதும் பெயர்களை இணைத்து மன்றத்தின் பெயரைச் சூட்டியிருந்தார். தேவகோபால கிருஷ்ண நாடக மன்றம் தயாரித்து மேடையேற்றிய நாடகங்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்றுச் சிறப்புச் செய்தார். 'மனோகரா' - மனோகரா, 'சாக்கிரட்டீஸ்' - சாக்கிரட்டீஸ், 'சாம்பிராட் அசோகன்' - அசோகன், 'மயான காண்டம்' - அரிச்சந்திரன், 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' - கட்டப்பொம்மன் மற்றும் 'விதியின் விளையாட்டு', 'நட்பு', 'கடன் படுத்தும்பாடு', 'படுக்கை அறையில் பயங்கரக் கொலை' போன்ற மன்றத்தின் நாடகங்களில் பிரதான பாத்திரங்களில் நடித்திருந்தார்.

இவர்களது தேவகோபால கிருஷ்ணா நாடக மன்றமும் காலையடி முருகன் விளையாட்டுக்கழகமும் இணைந்து 1972ல் காலையடி மறுமலர்ச்சி மன்றம் உருவாக்கம் பெறுகிறது. இம்மன்றம் பின்னாளில் 30 பரப்புக் காணியில் நூலகம், உள்ளரங்கு, திறந்த வெளியரங்கு, விளையாட்டு மைதானம் உள்ளடங்கிய பெருவிருட்சமாக வளர்ச்சி கண்டது. இம்மன்றத்துக்காக தேவராஜா அவர்கள் வாழ்வின் வலி, தூங்காத தூண்கள் போன்ற பல நாடகங்களை எழுதி அவற்றில் நடித்துமிருந்தார். இவர் பிரதான பாத்திரத்தில் நடித்த மன்றத்தினரின் காகிதப்புலிகள் என்ற





தாளலய நாடகம் 70 தடவைகள் மேடையேறியதும், அரியாலை சுதேசிய விழாவினர் நடத்திய வடமாகாண ரீதியிலான நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்றதும் குறிப்பிடதக்கது. மேலும் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் சிறுவர்களைக் கொண்டு குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் 'காட்டுராஜா சிங்கம்', 'கூடி விளையாடு பாப்பா', 'தாயுமானார் நாயுமானார்' ஆகிய நாடகங்களை இவர் நெறியாள்கை செய்து மேடையேற்றினார்.

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தைப் போல் காலையடி தெற்கு மறுமலர்ச்சி மன்றதின் உருவாக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் இவர் முக்கிய பங்கு வகித்தார். இம்மன்றத்துக்காக 'திகில்', 'காதலின் கீதம்', 'ஒளி பிறந்தது' ஆகிய நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்திருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவர்கள் மேடையேற்றிய, ஸ்ரீமுருகன் எழுதி நெறியாள்கை செய்த 'காதல் Vs கல்வி', 'சொர்க்கத்தில் சோசலிசம்' மற்றும் வாசுதேவன் இயக்கிய 'காகிதப்பூக்கள்' ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் இளந்தென்றல் கலைவிழாவில் மேடையேறிய 'காதல் Vs கல்வி' நாடகத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகருக்கான விருது இவருக்கு வழங்கப்பட்டது.

1973ல் கொழும்பில் இயங்கிவந்த பல நாடகக்குழுக்கள் இணைந்து நடிகர் ஒன்றியம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு, அதற்கான ரசிகர் அவை உருவாக்கப்பட்டு, வருடந்தோறும் நான்கு நாடக விழாக்களை நடத்தியது. 'பிச்சை வேண்டாம்', 'கடூழியம்', 'விழிப்பு', 'புதிய உலகம் பழைய இருவர்' போன்ற பல நாடகங்களை இவ்வமைப்பு மேடையேற்றியது.

1974ல் இலங்கை கலாச்சாரப் பேரவை நடத்திய நாடகப் போட்டியில் நடிகர் ஒன்றியம் மேடையேற்றிய நா. சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு' நாடகம் 'சிறந்த நாடகம்', 'சிறந்த தயாரிப்பு', 'சிறந்த பிரதி' ஆகியவற்றுக்கான விருதுகளுடன் 'சிறந்த நடிகராக' தாசீசியஸ் அவர்களும் 'சிறந்த நடிகை', 'இயக்குனர் விருது'களுக்கு முறையே விஜயாம் பீட்டர், நா. சுந்தரலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நாடகத்தில் தொழிலாளி பாத்திரத்தில் தேவராஜா அவர்கள் நடித்திருந்தார்.

இதேபோல் தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்திய நாடகப் போட்டியில் அ.த.சித்திரவேல் எழுதி இயக்கிய 'செவ்வானத்தில் ஒரு' நாடகம் சிறந்த நாடகம், சிறந்த பிரதிக்கான தேசிய விருது பெற்றதோடு சிறந்த நடிகராக கலைஞர் தேவராஜா தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ். நாடக அரங்கக் கல்லூரி தோற்றம் பெற்ற நாட்களில் அதில் இணைந்து நாடகப் பயிற்சி பெற்றதோடு கல்லூரி மேடையேற்றிய மஹாகவியின் கோடையில் சோமுவாகவும் நா. சுந்தரலிங்கத்தின் அபசுரம் நாடகத்தில் பொதுவராகவும், சி. மௌனகுருவின் சங்காரத்தில் தொழிலாளியாகவும், சி. தாசீசியஸின் பொறுத்தது போதும் நாடகத்தில் சுந்தரமாகவும் மற்றும் குழந்தை சண்முகலிங்கத்தின் உறவு நாடகத்திலும் நடித்துப் பெருமை சேர்த்தார். பொறுத்தது போதும் நாடகம் 25 தடவைகளுக்கு மேல் மேடையேறியதுடன் இலங்கை கலாச்சாரப் பேரவை நடத்திய நாடகப் போட்டியில் முதற் பரிசையும் சிறந்த பிரதி, நாடகத் தயாரிப்பு ஆகியவற்றுக்கான தேசிய விருதைப் பெற்றதும் சிறந்த நடிகராக பிரான்சிஸ் ஜெனம் தெரிவானதும் குறிப்பிடத்தக்கது. யாழ். நாடக அரங்கக் கல்லூரி, தாசீசியஸின் இலண்டன் 'களரி' அமைப்பு, சென்னை பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து சென்னையில் நடத்திய 'நாராய்... நாராய்...' கலைப் பயணத்தில் மேடையேறிய மஹாகவியின் புதியதொரு வீடு நாடகத்தில் கலைஞர் தேவராஜாவுடன் இணைந்து அவரது மனைவி, பிள்ளைகளும் நடித்திருந்தமை சிறப்புக்குரியது.


அண்மையில் மக்கள் களரி அமைப்பினர் மேடையேற்றிய பிரெக்டின் 'வெண்கட்டி வட்டம்' நாடகத்திலும் இவர் பங்கேற்றார். இந்நாடகத்தை பராக்கிரம நீரியல்ல நெறியாள்கை செய்திருந்தார். மேலும் மக்கள் களரி கலைஞன் லோகநாதன் நெறியாள்கை செய்ய நீர்வேலி செம்முக ஆற்றுகைக் குழுவும் அளவெட்டி ஆரோகணா அரங்கக் கல்லூரியும் இணைந்து தயாரித்த 'அன்பமுதூறும் அயலார்' என்ற நாடகத்திலும் இவர் நடித்திருந்தார். மேலும் கா. சிவபாலன் எழுதிய பாரதிதாசன் பற்றிய நாடகத்தில் பாரதிதாசனாகவும் அவர் இயங்கிய கோடை நாடகத்திலும் இவர் நடித்திருந்தார்.

கலைஞர் தேவராஜா அவர்கள் நாடகங்களில் நடித்ததோடு பல நாடகங்களை நெறியாள்கை செய்துமுள்ளார். தேசிய கலை இலக்கியப் பேரவையில் முக்கிய பதவிகள் வகித்த இவர், பேரவைக்காக குழந்தை சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும், மனத்தவம் மற்றும் அபசுரம், தாழியம், அயலார் தீர்ப்பு ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளார். எந்தையும் தாயும் நாடகத்தில் பெரியவராக இவர் நடித்துமிருந்தார். மேலும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் கொழும்பு தமிழ்ச்சங்கம் இணைந்து தயாரித்த சி. சிவசேகரத்தின் மலைகளை அகற்றிய மூடக்கிழவன், அயலார் தீர்ப்பு, பரமார்த்த குருவும் சீடரும் போன்ற நாடகங்களையும் நெறியாள்கை செய்திருந்தார்.

வி.எம். குகராஜா இயக்கி மகாஜன கல்லூரி மாணவர்கள் மேடையேற்றிய 'பிரம்படிபட்டவர்கள்' நாடகம் இவர் எழுதிய முக்கியமானதொரு நாடகமாகும். இந்நாடகத்துக்கு பிரபல இசையமைப்பாளர் கண்ணன் இசையமைந்திருந்தார். சங்கானை நிற்சாமம் சனசமூக நிலையத்தினருக்காக வியர்வைத் துளிகள் என்ற நாடகத்தினையும் இவர் எழுதி இயக்கியிருந்தார்.

நாடகங்களோடு நின்றுவிடாமல் வி.எம். குகராஜா தயாரித்த சிலந்தி வலை, கதை இதுதான் ஆகிய வீடியோ படங்களில் முக்கிய பாத்திரங்களில் இவர் நடித்தார். கதை இது தான் படத்தில் இவரது மனைவி கலாலட்சுமி கதாநாயகியாக நடித்திருந்தார்.

இவ்வாறு குழந்தை சன்முகலிங்கம், தாசீசியஸ், பிரான்சிஸ் ஜெனம், பராக்கிரம நீரியல்ல, பாலேந்திரா, நா. சுந்தரலிங்கம், அரசையா, மௌனகுரு, வரணியூரான் போன்ற பெரும் நாடக ஆளுமைகளோடு பணியாற்றிய அனுபவமிக்க கலைஞன் தேவராஜா அவர்கள் மென்மேலும் நாடக, கலை இலக்கியப் பணிகள் ஆற்றத் தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com